



dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

நமது
# தின கனி

NAMADHU DHINA KANI


www.dhinakani.com

காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 287 | 4 Pages | 14.5.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 287 | 4 பக்கங்கள் | 14.5.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த**

**நன்மை பயக்கு மெனின்**

**விளக்கம்:** குற்றம் தீர்த்த நன்மையை விளைக்குமானால் பொய்யாச் சொற்களும் வாய்மை என்று கருதத் தக்க இடத்தைப் பெறும்.

# பெருங்கொடுமைக்கு நீதி கிடைத்துள்ளது; முதல்வர் மு.க.ஸ்டாலின் மகிழ்ச்சி



சென்னை, மே.14

நாட்டையே உலுக்கிய பொள்ளாச்சி பாலியல் வழக்கில் குற்றவாளிகள் 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள்தண்டனைவிதித்துகோவை மகளிர் நீதிமன்ற நீதிபதி நந்தினி தேவி தீர்ப்பு வழங்கினார்.

இந்தநிலையில் : பொள்ளாச்சி பாலியல் வழக்கில் தீர்ப்பு வெளியான நிலையில் திமுகவினர் பட்டாசுகள் வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் கொண்டாடி வருகிறார்கள். நீதி நிலைநாட்டப்பட்டது என தெரிவித்து வருகிறார்கள். அந்த வகையில், பொள்ளாச்சி பாலியல் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு குறித்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பதிவில்,

பொல்லாத அ.தி.மு.க. நிர்வாகி உள்ளிட்ட குற்றவாளிகளால் நிகழ்த்தப்பட்ட பெருங்கொடுமைக்கு நீதி கிடைத்திருக்கிறது.

அ.தி.மு.க. குற்றவாளி அடங்கிய கூடாரத்தைப் பாதுகாக்க முயற்சித்த 'சார்'கள் மானமிருந்தால் வெட்கித் தலைகுனியட்டும் என பதிவிட்டுள்ளார்.

# தமிழ்நாட்டை அழிவுப் பாதைக்கு தி.மு.க. அழைத்துச் சென்று கொண்டிருக்கிறது: ஓ.பன்னீர்செல்வம் கடும் தாக்கு



சென்னை, மே.14

முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;


சட்டம்ஒழுங்கு சீரழிவு, போதைப் பொருட்கள் நடமாட்டம், மது விற்பனை, கள்ளச்சாராய விற்பனை, பாலியல் பலாத்காரம் போன்றவற்றில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்கிய தி.மு.க., கடன் பெறுவதிலும் இந்தியாவிலேயே தமிழ்நாட்டை தொடர்ந்து முதல் மாநிலமாக ஆக்கியிருப்பதாக பாரத ரிசர்வ் வங்கியின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டை அழிவுப் பாதைக்கு தி.மு.க. அழைத்துச் சென்று கொண்டிருக்கிறது. இது தான் தி.மு.க. அரசின் கடந்த நான்காண்டு கால சாதனை.

அரசுக்கு ஆண்டுக்கு ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் கூடுதல் வருவாய் கிடைத்தும், 5 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு கடன் பெற்றும், அரசு ஊழியர்கள் அதிருப்தி, ஆசிரியர்கள் அதிருப்தி, சத்துணவு ஊழியர்கள் அதிருப்தி, அங்கன்வாடி ஊழியர்கள் அதிருப்தி, மருத்துவர்கள் அதிருப்தி, செவிலியர்கள் அதிருப்தி, வணிகர்கள் அதிருப்தி, குறு சிறு தொழிலதிபர்கள் அதிருப்தி, தொழில்முனைவோர் அதிருப்தி, பொதுமக்கள் அதிருப்தி, தொழிலாளர்கள் அதிருப்தி, விவசாயிகள் அதிருப்தி என அனைத்துத்தரப்பு மக்களும் அதிருப்தியில் உறைந்து போயுள்ளனர்.

தி.மு.க. அரசின் நிர்வாகத் திறமையின்மைக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். தி.மு.க., தமிழ்நாட்டின் தற்போதைய நிதிநிலைமை குறித்து வெள்ளை அறிக்கையை வெளியிட வேண்டும்."

இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானுடன் மோதல் முடிந்தாலும்.. தொடர்ந்து உஷார்நிலையில் டெல்லி



புதுடெல்லி, மே.14

பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து இந்திய ராணுவம் 'ஆபரேஷன் சிந்தூர்' என்றபெயரில்தாக்குதல் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் உள்ள 9 பயங்கரவாத முகாம்களை தாக்கி அழித்தது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே போர் பதற்றம் நிலவி வந்தது.


இந்திய ராணுவத்தின் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையை தொடர்ந்து இந்தியாபாகிஸ்தான் இடையே போர் பதற்றம் அதிகரித்த நிலையில், எல்லையில் அத்துமீறி இந்திய பகுதிகளை குறிவைத்து கடந்த சில தினங்களாக பாகிஸ்தான் தாக்க முயற்சித்தது. இந்த தாக்குதல் முயற்சிகளை இந்திய ராணுவம் தொடர்ந்து முறியடித்தது.

இதன்படி பாகிஸ்தான் ராணுவத்துடன் இந்திய ராணுவம் நடத்திய மோதல் 4 நாட்கள் நீடித்தது. 7ந்தேதி தொடங்கிய மோதல் 11ந்தேதி நிறைவு பெற்றது. மோதலின்போது எல்லைப்பகுதிகள்மட்டும்இன்றி,தலைநகர்டெல்லியிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்தது. நாடாளுமன்றம் மற்றும் இந்தியா கேட், செங்கோட்டை, குதுப்மினார் போன்ற சுற்றுலா பயணிகள் அதிகம் கூடும் இடங்களிலும் ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டு இருந்தனர்.

இந்நிலையில் இந்த பாதுகாப்பு, தற்போது வரை விலக்கப்படவில்லை. அப்படியே தொடர்கிறது. மேலும் முன்பைவிட சற்று கூடுதலாகவே உள்ளது. சாலைகளில் தடுப்பு வேலிகள் முன்பு இருந்ததை விட நேற்று அதிகமாக்கப்பட்டுள்ளது. உள்துறை மந்திரி அமித்ஷா வீடு நோக்கி செல்லும் சுநேரி பாக் ரோடு, நேற்று இரவு போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டு இருந்தது. இரவு ரோந்து தீவிரமாக்கப்பட்டது. வாகன தணிக்கையும் தீவிரம் ஆக்கப்பட்டிருந்தது.

மேலும், அரசு நிறுவனங்கள் மற்றும் துறைகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும், முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்க ஏர் சைரன்கள் நிறுவுவது தொடரும் என்றும், முக்கிய அரசுத் துறைகளில் அதிகாரிகளின் விடுமுறைகளை ரத்து செய்யும் உத்தரவுகள் இன்னும் அமலில் இருப்பதாகவும் அதிகாரிகள் உறுதிப்படுத்தி உள்ளனர்.

# ஆப்கானிஸ்தானில் சதுரங்க விளையாட்டுக்கு தடை




காபூல், மே.14

ஆப்கானிஸ்தானில் சதுரங்க விளையாட்டுக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. இதுகுறித்து விளையாட்டுஇயக்குநரக செய்தித் தொடர்பாளர் அடல் மஷ்வானி கூறுகையில்,

" இஸ்லாமிய ஷரியாவின் கீழ் சதுரங்கம் சூதாட்டத்தின் ஒரு வழிமுறையாக கருதப்படுகிறது. இது நாட்டின் நன்மையை ஊக்குவித்தல் மற்றும் தீமையைத் தடுப்பதற்கான சட்டத்தின் படி தடைசெய்யப்பட்டுள்ளது. சதுரங்க விளையாட்டிற்கு மத ரீதியான ஆட்சேபனைகள் உள்ள நிலையில் அது தீர்க்கப்படும் வரை, ஆப்கானிஸ்தானில் இந்த விளையாட்டு நிறுத்தி வைக்கப்படும்."

இவ்வாறு அவர் கூறினார். இந்த முடிவு சதுரங்க ஆர்வலர்கள் மற்றும் தொடர்புடைய வணிகங்கள் மத்தியில் ஏமாற்றத்தைத் தந்துள்ளது. முன்னதாக பெண்கள் விளையாட்டுகளில் பங்கேற்கத் தாலிபான் அரசு தடை விதித்தது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க பணய கைதியை விடுதலை செய்யும் ஹமாஸ்




காசா சிட்டி, மே.14

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. அதேவேளை, பணய கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், ராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

பணய கைதிகளில் சிலர் ஹமாஸ் ஆயுதக்குழுவினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரப்படி, ஹமாஸ் ஆயுதக்குழுவின் பிடியில் இன்னும் 59 பேர் பணய கைதிகளாக உள்ளனர். இதில் 25க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், தங்கள் பிடியில் உள்ள அமெரிக்க பணய கைதியை இன்று விடுதலை செய்ய ஹமாஸ் ஒப்புக்கொண்டுள்ளது. இஸ்ரேல் வாழ் அமெரிக்கரான இடன் அலெக்சாண்டர் இஸ்ரேல் ராணுவத்தில் பணியாற்றி வந்தார். 2023 அக்டோபர் 7ம் தேதி நடந்த பயங்கரவாத தாக்குதலில் அலெக்சாண்டரை ஹமாஸ் ஆயுதக்குழுவினர் காசா முனைக்கு பணய கைதியாக கடத்தி சென்றனர்.

அவரை மீட்க பேச்சுவார்த்தை நடைபெற்றது. தற்போது அமெரிக்கா, ஹமாஸ் இடையேயான நேரடி பேச்சுவார்த்தையில் அலெக்சாண்டரை விடுதலை செய்ய ஹமாஸ் ஒப்புக்கொண்டது. அவர் இன்று விடுதலை செய்யப்படுவார் என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது.

# தமிழ்நாடு பள்ளித் துணை ஆய்வாளர் சங்கம் வழங்கும் முன்மாதிரி ஆசிரியர் விருது; ஆசிரியர் ஜோசப் ஜெயசீலன் அவர்களுக்கு வழங்கப்பட்டது

தமிழ்நாடு பள்ளித்துணை ஆய்வாளர் சங்கம் வழங்கும் முன்மாதிரி ஆசிரியர் விருது ஆசிரியர் ஜோசப் ஜெயசீலன் அவர்களுக்கு வழங்கப்பட்டது

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தை சேர்ந்த தந்தை பெரியநாயகம் தாயார் கஸ்தூரி தம்பதியருக்கு முதல் மகனாக 44 1977 பிறந்தவர் ஆசிரியர் ஜோசப் ஜெயசீலன் பாரம்பரிய கிறிஸ்தவ குடும்பத்தில் சேர்ந்த இவர் சிறிய வயதிலிருந்து கிறிஸ்துவ நெறி முறைகளை பின்பற்றி வளர்ந்தவர்

தொடக்கக்கல்வி சிஎஸ்ஐ தொடக்கப்பள்ளியில் படித்தார் உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி இந்து மேல்நிலைப் பள்ளியில் படித்தார் ..

கல்லூரி UG ராஜேஸ்வரி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் படித்தார் G அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் படித்தார் சென்னையில் BEd மெஸ்டன் கிறிஸ்துவ ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் படித்தார்

சென்னையில் உள்ள பிரிட்டானியா பள்ளியில் ஆசிரியர் பயிற்சி பெற்ற தன் படித்த இந்து மேல்நிலைப் பள்ளியிலேயே 2001 2002 ஆண்டு ஆசிரியராக இணைந்தார் ஆசிரியர் ஜோசப் ஜெயசீலன் மீண்டும் 20042006 அரசினர் உயர்நிலைப்பள்ளி சோத்துப்பாக்கத்தில் இணைந்தார்

2006இல் இந்து மேல்நிலைப் பள்ளியில் மீண்டும் பள்ளியில் இணைந்தார் 2009 அரசு வேலை கிடைத்து தன் படித்த பள்ளியிலேயே இந்து மேல்நிலை பள்ளியில் அரசு வேலையில் இணைந்தார்

அது மட்டும் இல்லாமல் மாணவர்களுக்கு நல்ல ஆசிரியராகவும் நல்ல நண்பனாகவும் நல்ல தகப்பனாகவும் இவர் இருந்து வருகிறார்....

பள்ளியில் SPC மாணவர்களுக்கு பயன்படும் வகையில் சாலை பாதுகாப்பு சங்க ஒருங்கிணைப்பாளராக இருக்கிறார் மது மற்றும் போதை உழைப்பு சங்கத் தலைவராக இருக்கிறார் ஆசிரியர் ஜோசப் ஜெயசீலன் NSS உதவி திட்ட இயக்குனராக இருக்கிறார் பள்ளியின் ஆசிரியர்கள் செயலாளராக இருக்கிறார் இவர் ஒரு சிறந்த சமூக சேவையாக விளங்கி வருகிறார்

கொடிய கொரோனா காலத்தில் ஏழை எளிய மாணவர்களுக்கு உதவி செய்தால் படிக்க முடியாத மாணவர்களுக்கு உதவி செய்தால் மாணவர்களை நல்வழிப்படுத்துதல் மாணவர்கள் படித்து முடித்தவுடன் பள்ளியில் இருந்து சென்றாலும்

அவர்கள் அந்த மாணவர்களை கல்லூரியில் சேர்க்கும் வேலை உயர்கல்வி படிக்கும் உதவி மாணவர்கள் நலன்களையே பற்றி யோசிக்கும்ஒருஆசிரியராகவிளங்கி வருகிறார் ஆசிரியர் ஜோசப் ஜெயசீலன் மிகவும் நேர்மையாகவும் மிகவும் கண்டிப்புடன் பழகக்கூடிய ஒரு ஆசிரியர் ஆசிரியர் ஜோசப் ஜெயசீலனுக்கு ரூபினி ரேச்சல் என்கிற மனைவியும் பிலிப்ஸ் சாமுவேல் பெர்வின் சாமுவேல் இரண்டு மகன்களும் இருக்கிறார்கள்

இது மட்டும் இல்லாமல் 2008 ஆண்டு முதல் தென்னிந்திய திருச்சபைCSI சென்னை பேராயும் மதுராந்தகம் குருசேகரத்தின் ஊழியராக பணியாற்றி வருகிறார்

எளிய மக்களுக்கு மருத்துவ உதவி விளிமினிலை மக்களுக்கு தன்னால் முடிந்த உதவி கிறிஸ்தவ மார்க்கத்தின் வழியாக பல அதுமட்டுமில்லாமல் கடந்த ஆண்டு தமிழ்நாடு லைன்ஸ் கிளப் சார்பாக திருவண்ணாமலை மாவட்டத்தில் சிறந்த நல்லாசிரியர் விருது வழங்கியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது

அதே பள்ளியில் படித்து அதே பள்ளியில் ஆசிரியராக வேலை செய்யும் பாக்கியம் எத்தனை பேருக்கு கிடைத்திருக்கிறது என்று இப்போது தெரியவில்லை நமது ஆசிரியர் ஜோசப் ஜெயசீலன் அவர்களுக்கு கிடைத்திருக்கிறது

இப்பொழுது மாம்பாக்கம் CSI பெத்தேல் ஆலயத்தில் ஊழியராக பணியாற்றி வருகிறார்

எங்கள் ஊழியர் மேலும் பல சாதனைகளை பெற வேண்டும் என்று மனதார வாழ்த்துகிறோம் ஜெபித்துக்கொள்கிறோம்சிஎஸ்ஐபெத்தேல் ஆலய இறை மக்கள் மாம்பாக்கம் மற்றும் கிராம பொதுமக்கள்







# அடுத்த அதிர்ச்சி.! தலையில் கல்லை போட்டு வாலிபர் படுகொலை. 5 சிறுவர்கள் உட்பட 6 பேர் கைது. திருப்பூரில் பயங்கரம்



திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியில் பிரகாஷ் என்ற 19 வயது வாலிபர் வசித்து வந்துள்ளார். இவர் திருப்பூரில் உள்ள கோல்டன் நகர் பகுதியில் ஆட்டோ ஓட்டுநராக பணியாற்றி வந்தார்.

இவருக்கும் அந்த பகுதியை சேர்ந்த சிலருக்கும் இடையே மது போதையில் தகராறு ஏற்பட்டு அது முன் விரோதமாக மாறி உள்ளது.

இந்நிலையில் நேற்று இரவு அதே பகுதியில் தலை நசுக்கப்பட்ட நிலையில் பிரகாஷ் சடலமாக கிடந்தார். இது தொடர்பாக காவல் துறையினருக்கு தகவல் கொடுக்கப்பட்ட நிலையில் அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை நடத்தினர். இந்நிலையில் பிரகாஷின் தலை உடைக்கப்பட்டு கிடந்ததோடு அவரின் அருகே ஒரு பெரிய கல்லும் கிடந்தது.

இதனால் அவர் தலையில் கல்லை போட்டு கொலை செய்யப்பட்டார் என்பது தெரிய வந்த நிலையில் '=அவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. பின்னர் திருப்பூர் காவல் துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டதில் 5 சிறுவர்கள் உட்பட

ஆறு பேர் சேர்ந்து அவரை கொலை செய்தது தெரியவந்த நிலையில் அவர்கள் அனைவரையும் போலீசார் கைது செய்தனர்.

இந்த கொலை ஏரியா பிரச்சனை தொடர்பாக நடந்ததாகக்கூறப்படுகிறது. மேலும் இது குறித்து போலீசார் விரிவான விசாரணை நடத்திவரும் நிலையில் இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கன்னியாகுமரி கடலில் ஒரே நேரத்தில் சூரியன் மறைவு, சந்திரன் உதயமாகும் அபூர்வ காட்சி: சுற்றுலா பயணிகள் ரசித்தனர்





கன்னியாகுமரி, மே.14

கன்னியாகுமரி கடலில் நேற்று மாலை ஒரே நேரத்தில் சூரியன் மறைவு மற்றும் சந்திரன் உதயமாகும் அபூர்வ நிகழ்வு நிகழ்ந்தது. இதனை ஏராளமான சுற்றுலா பயணிகள் பார்த்து ரசித்தனர். சர்வதேச சுற்றுலாத்தலமான கன்னியாகுமரிக்கு சித்திரை மாதத்தில் வரும் பவுர்ணமி நாளில் வழக்கத்தை விட சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிக்கும்.

இதற்கு காரணம் சித்ரா பவுர்ணமி நாளில் மாலை 6 மணிக்கு கன்னியாகுமரி கடலில் சூரியன் மறையும் போது சந்திரன் உதயமாகும் காட்சி ஒரே நேரத்தில் நிகழும்.

இந்த அபூர்வ காட்சியை கன்னியாகுமரி மற்றும் ஆப்பிரிக்க கண்டத்தில் உள்ள அடர்ந்த காடுகள் நிறைந்த ஒரு மலைப்பகுதியிலும் மட்டுமே காண முடியும். ஆப்பிரிக்க கண்டத்தில் உள்ள அடர்ந்த காட்டுப்பகுதிக்கு யாரும் செல்ல முடியாது என்பதால் கன்னியாகுமரி கடலில் இந்த அபூர்வ காட்சியை காண சித்ரா பவுர்ணமி நாளில் நாடு முழுவதும் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர்.

அதன்படி இந்தாண்டு சித்ரா பவுர்ணமி நாளான நேற்று மாலை 6 மணிக்கு கன்னியாகுமரியில்மேற்கு பக்கம் உள்ள அரபிக்கடல் பகுதியில் சூரியன் மஞ்சள் நிறத்தில் பந்து போன்ற வட்ட வடிவத்தில் கடலுக்குள் மறைந்தது. அப்போது கிழக்கு பக்கம் உள்ள வங்கக்கடல் பகுதியில் கடலும் வானமும் சந்திக்கும் இடத்துக்கு மேல் பகுதியில் சந்திரன் எழுந்தது. சந்திரனின் ஒளியால் வானம் பளிச்சென்று மின்னியது. இந்த அரிய காட்சியை முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் சங்கிலித்துறை கடற்கரை, சன்செட் பாயின்ட் கடற்கரை மற்றும் பழத்தோட்டம் பகுதியில் உள்ள முருகன் குன்றத்தில் சுற்றுலா பயணிகள் ஏராளமானவர்கள் பார்த்து ரசித்தனர்.

# அரியலூர் அருகே பரபரப்பு கொள்ளிடம் ஆற்றில் திடீரென தரையிறங்கிய ராணுவ ஹெலிகாப்டர்




அரியலூர், மே.14

கொள்ளிடம் ஆற்றில் நேற்று திடீரென தரையிறங்கிய ராணுவ ஹெலிகாப்டரால் பரபரப்பு ஏற்பட்டது. அரியலூர் மாவட்டம் திருமானூர் அருகே கொள்ளிடம் ஆறு 43 கி.மீட்டர் நீலத்திற்கு தா.பழூர் வரை செல்கிறது. தற்போது சுட்டெரிக்கும் கோடை வெயிலால் கொள்ளிடம் ஆற்றில் தண்ணீர் இல்லாமல் பாலைவனம்போல் காட்சி அளிக்கிறது. இந்த நிலையில் ராமாநல்லூருக்கும், அழகிய மணவாளன் கிராமத்துக்கும் இடையே உள்ள ஆற்றுப்பகுதியில் நேற்று காலை 11 மணியளவில் ஹெலிகாப்டர் வானில் வட்டமிட்டதோடு திடீரென தரையிறங்கியது. இதை பார்த்து அப்பகுதியில் உள்ள பொதுமக்கள்கடும்அதிர்ச்சியடைந்தனர்.

இந்தியா – பாகிஸ்தான் போர் நடைபெற்ற நிலையில், திடீரென கொள்ளிடம் ஆற்றின்நடுவே உள்ள நடுத்திட்டத்தில் ஹெலிகாப்டர் தரை இறங்கியது அப்பகுதி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியது. பொதுமக்கள் ஹெலிகாப்டர் இறங்கிய பகுதிக்கு விரைந்து சென்றனர். பொதுமக்கள் திரண்டு வருவதை பார்த்த விமானிகள், ஹெலிகாப்டர் இறங்கிய பகுதிக்கு யாரும் வர வேண்டாம் என எச்சரித்தனர். சில நிமிடத்திற்கு பின் அந்த ஹெலிகாப்டர் அங்கிருந்து புறப்பட்டு சென்றது. அரியலூர் போலீசார் வந்து கூடியிருந்தவர்களிடம், தஞ்சாவூர் விமானப்படை பயிற்சிமையத்தின்ஹெலிகாப்டர், மாதத்திற்கு ஒரு முறை கொள்ளிடம் வந்து ஆற்றில் இறக்கி பயிற்சி எடுப்பார்கள். எனவே யாரும் அச்சப்பட தேவையில்லை என்றனர். இதையடுத்து பொதுமக்கள் நிம்மதியடைந்தனர்.

# நீதிமன்ற ஊழியர் தூக்கிட்டு தற்கொலை: பரபரப்பு ஆடியோ வைரல்




நாகர்கோவில், மே.14

நாகர்கோவில் வட்டக்கரை பகுதியை சேர்ந்தவர் நாகராஜன் (38). இவர் தமிழ்நாடு நீதித்துறையில் தூய்மை பணியாளராக பணிக்கு சேர்ந்து, அலுவலக உதவியாளராக உயர்ந்தார். கடந்த 1 வருடமாக குமரி மாவட்டம் குழித்துறை நீதிமன்றத்தில் பணியில் இருந்து வந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இவர் வட்டக்கரையில் உள்ள தனது வீட்டின் படுக்கை அறையில் துப்பட்டாவால் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து நேசமணிநகர் போலீசார் விசாரித்தனர். நாகராஜனின் மனைவி உமா மகேஸ்வரி (29), அளித்த புகாரி ல் கடந்த 4 மாதங்களாக பணியிடத்தில் கணவர் நாகராஜனுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தி உள்ளனர். ஜாதியை சொல்லி திட்டுவதாகவும் கூறி அவர் வேதனையில் இருந்தார். கடந்த இரு நாட்களுக்கு முன் முறையாக தகவல் கொடுத்து விடுப்பு எடுத்துள்ளார்.

ஆனாலும் அவரிடம் போனில் பேசி சஸ்பெண்ட் செய்து விடுவதாக மிரட்டினர். இதனால் மன அழுத்தம் அதிகரித்து தூக்கு போட்டு இறந்துள்ளார் என கூறி உள்ளார். இதன் பேரில் நேசமணிநகர் போலீசார் தற்போது பி.என்.எஸ். 194 பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளனர். இதற்கிடையே நாகராஜன் பேசியதாக ஆடியோக்கள் சில சமூக வலைதளங்களில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# நூறு நாள் வேலை திட்டத்தின்போது ஆலமரம் முறிந்து விழுந்ததில் 3 பெண் தொழிலாளிகள் பலி



செய்யாறு, மே.14

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அடுத்த கழனிப்பாக்கம் கிராமத்தில் நூறு நாள் வேலைதிட்டத்தில்பெண்கள் உள்பட 49 பேர் வேலை செய்து கொண்டிருந்தனர். மதியம் 12 மணியளவில் அதிக வெயில் காரணமாக அங்குள்ள ஆலமரத்தின் அருகே ஒதுங்கினர். அப்போது லேசான காற்று வீசியுள்ளது. இதில் மரத்தின் ஒரு பகுதி வேரோடு முறிந்து விழுந்தது. இதில் சிக்கிய கோவிந்தசாமியின் மனைவி வேண்டா (65), துரைசாமியின் மனைவி அன்னபூரணி (75) ஆகியோர் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் தேவி (54), சம்பூரணம் (60), பச்சையம்மாள் (60), பாஞ்சலை (50), கனகா (58), முத்தம்மாள் (35), அனிதா(55), பத்மாவதி(50), மணிவண்ணன் மகள் ரக்ஷிதா(7), மகன் பிரித்திவின்(4), சந்திரசேகர் மகன் கிரிஷாந்த்(5) ஆகிய 11 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து செய்யாறு தீயணைப்பு படையினர் மற்றும் போலீசார் வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். காயமடைந்தவர்களை செய்யாறு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு பச்சையம்மாள் இறந்தார். மற்றவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

# சிறுமியை மீட்க வாய்க்காலில் இறங்கிய பெண் உட்பட 2 பேர் மூழ்கி பலி



உடுமலை, மே.14

கோவை மாவட்டம் பொள்ளாச்சியை அடுத்த மன்னூர் பகுதியை சேர்ந்தவர் விவேகானந்தன் (36). இவரது மனைவி கவுசல்யா (32). 2 மகள்கள் உள்ளனர். விவேகானந்தனின் தம்பி கார்த்திக் குமார் (34) ஈரோட்டில் இருந்து மனைவி கனிமொழி (28) 2 மகள்களுடன் அண்ணன் வீட்டிற்கு வந்தார். நேற்று இரு குடும்பத்தினரும் திருமூர்த்தி மலைக்கு சென்று சாமி கும்பிட்டுவிட்டு பிஏபி கால்வாயில் குளித்தனர். அப்போது ஒரு சிறுமி நீரில் மூழ்கவே அவரை மீட்க கார்த்திக் குமார், கவுசல்யா, கனிமொழி ஆகியோர் ஆழமான பகுதிக்கு சென்று தேடினர். அப்போது அவர்களும் மூழ்கினர். உள்ளூர் இளைஞர்கள் சிறுமியை காப்பாற்றினர். அதற்குள் கவுசல்யாவும், கார்த்திக் குமாரும் இறந்தனர்.

# வேலூர் முள்ளிப்பாளையத்தில் அடிப்படை வசதி கோரி பொதுமக்கள் திடீர் மறியல்



வேலூர், மே.14

வேலூர் முள்ளிப்பாளையத்தில் அடிப்படை வசதி கோரி பொதுமக்கள் திடீர் மறியலில் ஈடுபட்டனர். அவர்களிடம் போலீசார் சமரசம் செய்தனர். வேலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 31வது வார்டில் உள்ள முள்ளிப்பாளையம் வீராசாமி தெரு 1, 2, 3 மற்றும் பாறைமேடு பகுதிகளில் 500க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

இப்பகுதிகளில் சரிவர குடிநீர் விநியோகம் செய்வதில்லையாம். மேலும் கழிவுநீர்கால்வாய் மற்றும் சாலை வசதிகளும் இல்லை எனக்கூறப்படுகிறது. இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகளிடம் அவ்வப்போது தெரிவித்தும் நடவடிக்கை இல்லையாம்.

இதனால் ஒவ்வொரு முறையும் மழையின் போது வீடுகளுக்குள் கழிவுநீருடன் மழைநீர் புகுந்துவிடுவதால் மக்கள் பெரும் சிரமமடைந்து வருவதாகவும், இதனால் பலருக்கும் நோய் பாதிப்பு ஏற்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

எனவே அடிப்படை வசதிகோரி நேற்று 50க்கும் மேற்பட்டோர் பழைய பெங்களூரு சாலையில் திடீர்சாலை மறியலில் ஈடுபட்டனர். தகவலறிந்த வடக்கு இன்ஸ்பெக்டர் சீனிவாசன் மற்றும் வருவாய்த்துறையினர் விரைந்து வந்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது, நாளை(இன்று) அடிப்படை வசதி தொடர்பாக மாநகராட்சி அதிகாரிகளிடம் பேசி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர்.

இதையேற்று அனைவரும் கலைந்து சென்றனர். இதனால் சிறிதுநேரம் போக்குவரத்து பாதித்தது.

# மிஸ் கூவாகமாக ரேணுகா தேர்வு: கள்ளக்குறிச்சி அஞ்சனாவுக்கு 2ம் இடம்



சென்னை, மே.14

கள்ளக் குறிச்சி மாவட்டம் கூவாகம் கூத்தாண்டவர் கோயில் சித்திரை திருவிழாவையொட்டி நாடு முழுவதிலிருந்தும் திருநங்கைகள் ஒரே இடத்தில் குவிந்துள்ளனர். இதனை தொடர்ந்து நேற்று தென்னிந்திய திருநங்கையர் கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு சமூக நலத்துறை, தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுபாட்டு சங்கம் இணைந்து மிஸ்கூவாகம்2025 அழகி போட்டி நேற்றுகாலை3சுற்றுகளாக நடத்தப்பட்டது. காலையில் நடைபெற்ற முதல் சுற்றில் 25 திருநங்கைகள் பங்கேற்றனர். அதில் நடை, உடை, பாவனை அடிப்படையில் 15 திருநங்கைகள் அடுத்த சுற்றுக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

பின்னர் நேற்றிரவு நகராட்சி திடலில் நடைபெற்ற இறுதி சுற்றுக்குள் 7 பேர் நுழைந்தனர். தொடர்ந்து இறுதி சுற்றில் பங்கேற்ற திருநங்கைகளிடம் கல்வி, பாலினம், சமூக விழிப்புணர்வு தொடர்பான கேள்விகளை நடுவர்கள் எழுப்பினர். தொடர்ந்து இறுதி சுற்று முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அதில் நெல்லை ரேணுகா மிஸ்கூவாகம்2025 அழகி பட்டத்தை வென்றார். 2வது இடத்தை கள்ளக்குறிச்சி அஞ்சனா, 3வது இடத்தை கோவை ஆஷ்மிகா ஆகியோர் பிடித்தனர். தொடர்ந்து அவர்களுக்கு சிறப்பு விருந்தினர்கள் கிரீடம் சூட்டி ரொக்கப்பரிசு வழங்கினர்.

# தமிழில் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் 33 வகைப்பாடுகளின் கீழ் பரிசுப்போட்டி: தமிழ் வளர்ச்சித்துறை அறிவிப்பு



சென்னை, மே.14

தமிழில் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் 33 வகைப்பாடுகளின்கீழ் பரிசுப்போட்டிக்கு வரவேற்கப்படுகிறது என தமிழ் வளர்ச்சித்துறை அறிவித்துள்ளது. 2024ம் ஆண்டில் (01.01.2024 முதல் 31.12.2024 வரை) தமிழில் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள 33 வகைப்பாடுகளின் கீழ், பரிசுப்போட்டிக்கு வரவேற்கப்படுகின்றன. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொருவகைப்பாட்டிலும் சிறந்த நூலாக ஒரு நூல் தெரிவு செய்யப்பட்டு, நூலாசிரியருக்குப் பரிசுத்தொகையாக ரூ.50,000, அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்குப் பாராட்டுத்தொகையாக ரூ.25,000 என ஒரு நூலுக்கு ரூ.75,000 வரை பரிசுத்தொகைகள் வழங்கப்பெறும்.

மரபுக்கவிதை, புதுக்கவிதை, புதினம், சிறுகதை, நாடகம் (உரைநடை, கவிதை), சிறுவர் இலக்கியம், திறனாய்வு, மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி, இலக்கணம், பிறமொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள், நுண் கலைகள் (இசை, ஓவியம், நடனம், சிற்பம்), அகராதி, கலைக்களஞ்சியம், கலைச்சொல்லாக்கம், ஆட்சித் தமிழ், பயண இலக்கியம், வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு, நாட்டு வரலாறு, கல்வெட்டு, தொல்லியல், கடலியலும் வணிக வழிகளும், அகழாய்வு, கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல், பொறியியல், தொழில்நுட்பவியல், மானிடவியல், சமூகவியல், புவியியல், நிலவியல், சட்டவியல், அரசியல், பொருளியல், வணிகவியல், மேலாண்மையியல், மருந்தியல், உடலியல், நலவியல் உள்ளிட்ட 33 பிரிவுகளில் பரிசுக்குரிய விண்ணப்பம் மற்றும் விதிமுறைகள் தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ் வளர்ச்சி வளாகம் முதல் தளம், தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை 600008. தொலைபேசி எண்கள். 044–28190412,28190413 என்ற முகவரியில் நேரிலோ, அஞ்சல் வாயிலாகவோ அல்லது இத்துறையின்வலைதளத்திலோ www.tamilvalarchithurai.org/siranthanool இலவசமாகப் பதிவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

அஞ்சல் வாயிலாகப் பெற 23X10 செ.மீ அளவிலான சுய முகவரியிட்ட உறையில் ரூ.10 அஞ்சல்வில்லை ஒட்டி அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். போட்டிக்கான விண்ணப்பத்துடன் 5 நூற்படிகளும் போட்டிக் கட்டணம் ரூ.100 “தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை“ என்ற பெயரில் வங்கிக் கேட்புக் காசோலை சேர்த்து அளிக்க வேண்டும். நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஜூன் 16ம்தேதி அனுப்பிவைக்க வேண்டும்.

# பொள்ளாச்சி பாலியல் வழக்கு: குற்றவாளிகள் 9 பேருக்கும் சாகும்வரை ஆயுள் தண்டனை



கோவை, மே.14

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் கல்லூரி மாணவிகள், இளம்பெண்களை வீடியோ எடுத்து பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் கடந்த 2019ம் ஆண்டு நடந்தது. இதில் பாதிக்கப்பட்ட இளம்பெண்கள் கதறும் ஆடியோ சமூக வலைத்தளங்களில் வைரலானது. இது தமிழகத்தையே உலுக்கியது.

இதையடுத்து பாதிக்கப்பட்ட இளம்பெண்கள் பொள்ளாச்சி டவுன் போலீசில் புகார் அளித்தனர். அதன்பேரில் போலீசார் வழக்குபதிவு செய்து விசாரித்தனர். அதன்பிறகு இந்த வழக்கை சி.பி.ஐ. கையில் எடுத்தது. இதில் பொள்ளாச்சியை சேர்ந்த சபரிராஜன்(வயது 30), வசந்தகுமார்(32), சதீஷ் (33), மணிவண்ணன் (30), திருநாவுக்கரசு (30), ஹேரேன் பால் (34), பாபு என்ற பைக் பாபு (38), அருளானந்தம் (38), அருண்குமார் (36) ஆகிய 9 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீது பாலியல் வன்கொடுமை, அத்துமீறல், ஆள்கடத்தல், அடைத்து வைத்து துன்புறுத்துதல், கூட்டுசதி, தடயங்கள் அழிப்பு, ஆபாச வீடியோ எடுத்தல், ஆபாச வீடியோக்களை பகிர்தல் உள்பட 13 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. கைதான 9 பேரும் சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்கள் மீதான வழக்கு விசாரணை கோவை மகிளா சிறப்பு கோர்ட்டில் நடந்து வந்தது.

இவர்கள் மீது 2019ம் ஆண்டு மே 21ந் தேதி கோவை மகளிர் கோர்ட்டில் சி.பி.ஐ. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. அதன் பிறகு வழக்கு விசாரணை தாமதம் ஆனது. அதைத்தொடர்ந்து ஐகோர்ட்டு உத்தரவின் பேரில் கோவை ஒருங்கிணைந்த கோர்ட்டு வளாகத்தில் தனியாக அறை ஒதுக்கி விசாரணை தீவிரப்படுத்தப்பட்டது. மகளிர் கோர்ட்டு நீதிபதி நந்தினி தேவி முன்னிலையில் கடந்த 2023ம் ஆண்டு பிப்ரவரி 24ந் தேதி சாட்சி விசாரணை தொடங்கியது. இந்த வழக்கில் சாட்சி விசாரணை, அரசு மற்றும் எதிர்தரப்பு இறுதிவாதம் முடிவடைந்தது.

இதையடுத்து வழக்கின் தீர்ப்பு இன்று (செவ்வாய்க்கிழமை) அறிவிக்கப்பட்டது. அதன்படி வழக்கில் கைது செய்யப்பட்ட அனைவரும் குற்றவாளிகள் என நீதிபதி நந்தினி தேவி அறிவித்தார். மேலும் அவர்களுக்கு சாகும்வரை ஆயுள் தண்டனை விதித்து நீதிபதி உத்தரவிட்டார். முன்னதாக கைதான 9 பேரும் நீதிபதி முன்பு நேரில் ஆஜர்படுத்தப்பட்டனர். கடந்த 6 ஆண்டுகளாக நடந்து வந்த இந்த வழக்கு இன்று முடிவுக்கு வந்துள்ளது. தீர்ப்பையொட்டி கோவை கோர்ட்டு வளாகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

மேலும் தண்டனை வழங்கும்போது வயதை கருத்தில் கொள்ளவேண்டுமென குற்றவாளிகள் தரப்பில் வைக்கப்பட்ட கோரிக்கையை நீதிபதி நிராகரித்தார்.

அதன்பின்னர் அரசு தரப்பு வழக்கறிஞர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

குற்றவாளிகள் 9 பேருக்கும் சாகும்வரை ஆயுள்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மொத்தமாக ரூ.85 லட்சம் நிவாரணம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 10 முதல் ரூ.15 லட்சம் வரை நிவாரணம் கிடைக்கும். சட்டப்பிரிவு 376டி, 376என் ஆகிய பிரிவுகளின்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு அறிவிக்கப்பட்டுள்ளது.

48 சாட்சியங்களிடம் விசாரணை நடத்தப்பட்டது; பாதிக்கப்பட்ட பெண்கள் அனைவரும் தாமாக முன்வந்து வழக்கில் சாட்சியளித்தனர்; வழக்கில் ஒருவர் கூட பிறழ் சாட்சியாக மாறவில்லை. வழக்கு விசாரணையில் மின்னணு சாட்சியங்கள் முக்கியப்பங்கு வகித்துள்ளன. அழிக்கப்பட்ட வீடியோக்களையும் மீட்டெடுத்து பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டனர். வீடியோக்களின் உண்மைத்தன்மையும் ஆராயப்பட்டே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வலுவான ஆதாரங்கள் இருப்பதால், மேல்முறையீடு சென்றாலும் குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட தண்டனை உறுதி செய்யப்படும் என்று கூறினார்.

# இலவச வேட்டி - சேலை திட்டத்திற்காக 4600 மெட்ரிக் டன் நூல் கொள்முதல் செய்ய டெண்டர்: முதற்கட்டமாக ரூ.75 கோடி ஒதுக்கீடு; அரசாணை வெளியீடு

சென்னை, மே.14

பொங்கல் பண்டிகைக்காக வழங்கப்படும் வேட்டி மற்றும் சேலை திட்டத்திற்காக 4600 மெட்ரிக் டன் நூல் கொள்முதல் செய்ய தமிழக அரசு டெண்டர் கோரியுள்ளது. இதற்காக முதற்கட்டமாக ரூ.75 கோடி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதுகுறித்து கைத்தறி மற்றும் துணிநூல் துறை வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது: “வரும், 2026 பொங்கல் பண்டிகையின்போது இலவச வேட்டி, சேலை பயனாளிகளுக்கு வழங்குவதுடன், முதியோர் ஓய்வூதிய திட்ட பயனாளிகளுக்கும் வழங்கவும், நெசவாளர்களுக்கு தொடர் வேலை வாய்ப்பு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, 2026ம் ஆண்டு பொங்கலுக்கு 1 கோடியே, 44 லட்சத்து, 10 ஆயிரம் வேட்டிகள், 1 கோடியே 46 லட்சத்து 10 ஆயிரம் சேலைகள் உற்பத்தி செய்யப்பட உள்ளன. இத்திட்டத்தினை செயல்படுத்தும் வகையில் 4,600 மெட்ரிக் டன் நூல் கொள்முதல் செய்வதற்கான டெண்டர் கோரப்பட்டுள்ளது. மேலும் முதற்கட்டமாக ரூ.75 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உற்பத்தி பணிகள் ஜூலை இறுதியில் தொடங்க திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அண்ணா மேம்பாலத்தில் 2012ல் நடந்த விபத்து பேருந்து ஓட்டுநர் விடுதலை: சென்னை மாஜிஸ்திரேட் நீதிமன்றம் தீர்ப்பு



சென்னை, மே.14

சென்னையில் கடந்த 2012ம் ஆண்டு ஜூன் மாதம் 27ம் தேதி அண்ணா மேம்பாலத்தில் மாநகரப் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பாரிமுனையிலிருந்து வடபழனிக்கு செல்லும் 17எம் என்கின்ற பேருந்து அண்ணா மேம்பாலத்தில் சென்று கொண்டு இருக்கும் போது, இடது வளைவில் திரும்பும் போது டிரைவர் சீட் கழன்றதால் பேருந்து வலதுபக்கம்தள்ளப்பட்டு மேம்பாலச் சுவரை உடைத்துக்கொண்டு தலைக்குப்புறகீழேவிழுந்தது. இந்த விபத்தில் பேருந்தில் இருந்த 40 பயணிகளும் சிறு காயங்களுடன் தப்பினர்.

இந்த சம்பவம் தொடர்பாக போக்குவரத்து போலீசார், ஓட்டுனர் பிரசாத்தை கைது செய்து அவரது ஓட்டுனர் உரிமத்தை பறிமுதல் செய்தனர். அவர் மீது, கண்மூடித்தனமாகவும் கவனக்குறைவாகவும் வண்டி ஓட்டுதல், உயிருக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் செயல்கள் மூலம் பிறரை காயப்படுத்துதல், உயிருக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் செயல்கள் மூலம் பிறரை மோசமாகக் காயப்படுத்துதல் ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. ஓட்டுனர் செல்பேசியில் பேசிக் கொண்டே ஓட்டியதால் தான் விபத்து ஏற்பட்டதாக கூறப்பட்டது.

இந்த நிலையில் இந்த வழக்கின் விசாரணை சென்னை சைதாப்பேட்டை 9வது மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நீதிபதி சுப்ரமணியம் முன்பு நடைபெற்றது.

ஓட்டுநர் சார்பில் வழக்கறிஞர் ஆர்.ஒய்.ஜார்ஜ் வில்லியம் ஆஜராகி, ஓட்டுனரின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்படவில்லை. அவர் செல்போனில் பேசவில்லை. தொழில்நுட்ப கோளாறு தான் காரணம். ஓட்டுனர் இருக்கை திடீரென்று கழன்றதால், பேருந்தின் ஸ்டேரிங் லாக் ஆகி விபத்து ஏற்பட்டது. இதை திசை திருப்ப அப்போதைய அரசு விபத்தில் காயமடைந்தவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கியது. விபத்து நடந்த

பேருந்தில் பயணித்தவர்களில் 3 பேர் சொன்ன சாட்சியத்தில் ஓட்டுநரின் இருக்கை கழன்று விழுந்ததை பார்த்ததாக தெரிவித்துள்ளனர் என்று வாதிட்டார். வழக்கை விசாரித்த நீதிபதி, டிரைவர் பிரசாத்தை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளித்தார். ஏற்கனவே, டிரைவர் பிரசாத்தை பணி நீக்கம் செய்த உத்தரவை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது குறிப்பிடத்தக்கது.

# சென்னை: காதல் தோல்வியால் வாலிபர் தற்கொலை

சென்னை, மே.14

சென்னைதிரு.வி.க.நகர் கென்னடி ஸ்கொயர் பிரதான சாலையைச் சேர்ந்தவர் விஸ்வநாதன் (23 வயது). பாலிடெக்னிக் முடித்துவிட்டு கடந்த 2 வருடங்களாக அம்பத்தூரில் உள்ள தனியார் கம்பெனியில் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்து வந்தார். விஸ்வநாதன் கடந்த 7 வருடங்களாக தன்னுடன் படித்த பெண்ணை காதலித்து வந்துள்ளார். கடந்த ஒரு மாதமாக அந்த பெண் சரிவர பேசாமல் காதலிப்பதை விட்டு விடுமாறு விஸ்வநாதனிடம் கூறியதாக தெரிகிறது.

இதுகுறித்து தனது பெற்றோரிடம் கூறிய விஸ்வநாதன் கடந்த ஒரு வாரமாக மன உளைச்சலில் இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் வீட்டில் யாரும் இல்லாத போது விஸ்வநாதன் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இதுகுறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு வந்த போலீசார் விஸ்வநாதனின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மின்னணு முறையில் சந்தைப்படுத்தல் குறித்த 2 நாள் பயிற்சி: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, மே.14

தமிழக அரசு சார்பில் சென்னையில், "தொழில் முனைவோர் மற்றும் சிறு வணிகங்களுக்கான டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பட்டறை" பயிற்சி நடைபெற உள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"தமிழகஅரசின்தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், "தொழில்முனைவோர் மற்றும் சிறு வணிகங்களுக்கான டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பட்டறை" பயிற்சி வரும் 28.05.2025 முதல் 29.05.2025 தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையின் முக்கிய மதிப்பு முன்மொழிவுகள்:

- வணிக சந்தைப்படுத்துதலின் அடிப்படைகள்
- வளர்ச்சிக்கான அலகு பொருளாதாரம்
- முக்கிய அளவீடுகளைப் புரிந்துகொள்ளுதல்
- அதிக மாற்றும் சந்தைப் படுத்துதல் புனலை உருவாக்குதல்
- டிஜிட்டல் சந்தைப்படுத்துதலின் ரகசியங்கள்
- வெற்றிக்கான தந்திரங்கள் மற்றும் கருவிகள்
- குறிப்புக்கான நிகழ்வு ஆய்வுகள்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற் பேட்டை, பார்த்தசாரதி கோயில் தெரு, இ.டி.ஐ.ஐ. அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை – 600 032, கைபேசி எண்கள்: 9360221280 / 9543773337. முன்பதிவு அவசியம். அரசு சான்றிதழ் வழங்கப்படும்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேலூர் முள்ளிப்பாளையத்தில் அடிப்படை வசதி கோரி பொதுமக்கள் திடீர் மறியல்



வேலூர்,மே.14

வேலூர் முள்ளிப்பாளையத்தில் அடிப்படை வசதி கோரி பொதுமக்கள் திடீர் மறியலில் ஈடுபட்டனர். அவர்களிடம் போலீசார் சமரசம் செய்தனர். வேலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 31வது வார்டில் உள்ள முள்ளிப்பாளையம் வீராசாமி தெரு 1, 2, 3 மற்றும் பாறைமேடு பகுதிகளில் 500க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

இப்பகுதிகளில் சரிவர குடிநீர் விநியோகம் செய்வதில்லையாம். மேலும் கழிவுநீர்கால்வாய் மற்றும் சாலை வசதிகளும் இல்லை எனக்கூறப்படுகிறது. இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகளிடம் அவ்வப்போது தெரிவித்தும் நடவடிக்கை இல்லையாம்.

இதனால் ஒவ்வொரு முறையும் மழையின் போது வீடுகளுக்குள் கழிவுநீருடன் மழைநீர் புகுந்து விடுவதால் மக்கள் பெரும் சிரமமடைந்து வருவதாகவும், இதனால் பலருக்கும் நோய் பாதிப்பு ஏற்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. எனவே அடிப்படை வசதிகோரி நேற்று 50க்கும் மேற்பட்டோர் பழைய பெங்களூரு சாலையில் திடீர்சாலை மறியலில் ஈடுபட்டனர். தகவலறிந்த வடக்கு இன்ஸ்பெக்டர் சீனிவாசன் மற்றும் வருவாய்த்துறையினர் விரைந்து வந்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது, நாளை(இன்று) அடிப்படை வசதி தொடர்பாக மாநகராட்சி அதிகாரிகளிடம் பேசி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர். இதையேற்று அனைவரும் கலைந்து சென்றனர். இதனால் சிறிதுநேரம் போக்குவரத்து பாதித்தது.

# வியக்க வைக்கும் வெம்பக்கோட்டை: சுடுமண்ணால் செய்யப்பட்ட நட்சத்திர அணிகலன்கள் கண்டெடுப்பு



சென்னை மே.14

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அருகே உள்ள விஜயகரிசல்குளத்தில் 3ம் கட்ட அகழாய்வு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. அகழாய்வில் இதுவரை 20 குழிகள் தோண்டப்பட்டுள்ளன.

இதில் இருந்து ஏராளமான சங்கு வளையல்கள், சில்லு வட்டுகள், கல்மணிகள், கண்ணாடி மணிகள், செவ்வந்திகல், சுடுமண்ணால் செய்யப்பட்ட ஆபரணங்கள், சதுரங்க ஆட்டகாய்கள், பண்டைய காலத்தில் பயன்படுத்தப்பட்ட செங்கல், சேர நாட்டு செப்பு காசுகள், வேட்டைக்கு பயன்படுத்தப்பட்ட கருவிகள் உட்பட 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், வெம்பக்கோட்டை அகழாய்வில் சுடுமண்ணால் செய்யப்பட்ட நட்சத்திரவ்ஃப்மி அணிகலன்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து அமைச்சர் தங்கம் தென்னரசு எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

ஆச்சர்யங்கள் நிறைந்த பல தொல்பொருள்களை தன்னுள் வைத்திருக்கும் வெம்பக்கோட்டை 3ம் கட்ட அகழாய்வுத் தளத்தில் 1.90 மீட்டர் ஆழத்தில், சுடுமண்ணால் செய்யப்பட்ட நட்சத்திர அணிகலன்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. 1.8 மி.மீசுற்றளவும், 0.6 மி.மீ கணமும், 3.4 கிராம் எடையும் கொண்ட இந்த அணிகலன் அதன் இணையோடு கிடைத்திருப்பது கூடுதல் சிறப்பு. இன்னும் பழந்தமிழர் பொக்கிஷங்கள் பலவற்றை தொல்லியல் துறை வெளிச்சத்திற்கு கொண்டு வரும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# ஆன்லைனில் கத்தி ஆர்டர்.. மருத்துவ கல்லூரி மாணவர் கழுத்தை அறுத்து தற்கொலை



புனே, மே.14

மராட்டிய மாநிலம் பீட் மாவட்டத்தை சேர்ந்தவர் உத்கர்ஷ் ஷிங்னே(வயது19). இவரது தந்தை டாக்டராக உள்ளார். கடந்த நீட் தேர்வில் 720க்கு 710 மதிப்பெண் எடுத்த ஷிங்னே மேற்படிப்புக்காக போபாலில் உள்ள எய்ம்ஸ் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்ந்து படித்து வந்தார்.

இதற்காக அவர் அங்குள்ள வானோவரி பகுதியில் உள்ள பஞ்சரத்னா அடுக்குமாடி குடியிருப்பில் தங்கி கல்லூரிக்கு சென்று வந்தார். இந்நிலையில் நேற்று காலை ஷிங்னேவின் வீடு வெகுநேரமாக திறக்கப்படாததால் அக்கம்பக்கத்தினர் சென்று கதவைதட்டினர். உள்ளே இருந்து எந்த பதிலும் வராததால் சந்தேகம் அடைந்த அவர்கள், கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தனர்.

அப்போது குளியலறையில் ஷிங்னே ரத்தவெள்ளத்தில் பிணமாக கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

இதுபற்றிய தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் மாணவரின் உடலை மீட்டு விசாரணை நடத்தினர். இதில் அவர் கழுத்தை அறுத்து தற்கொலை செய்து கொண்டது தெரிய வந்தது.

பின்னர் போலீசார் உடலை பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் வீட்டில் இருந்த மாணவரின் செல்போனை கைப்பற்றி ஆய்வு செய்தனர். அதில் வாட்ஸ்அப்பில் ஷிங்னே ஒரு குறிப்பு அனுப்பியிருந்தார். அதில் பாடத்திட்டத்தில் மாற்றம், வருகை பதிவேடுகுறைவுபோன்ற காரணத்தால் மனஅழுத்தத்தில் இருந்ததற்காகமாணவர்சிகிச்சை பெற்று வந்தது தெரிய வந்தது,

மேலும் போலீசார் நடத்திய விசாரணையில், கடந்த சில நாட்களுக்கு முன்பு மாணவர் ஆன்லைன்மூலம் புதிதாக கத்தி ஒன்றை ஆர்டர் செய்ததாகவும், அதன்மூலம் தான் கழுத்தை அறுத்து அவர் தற்கொலை செய்து கொண்டதாகவும் போலீஸ் அதிகாரி ஒருவர் கூறினார். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சாதியால் நன்கொடை பெற மறுப்பதும் தீண்டாமையே சென்னை ஐகோர்ட்டு



சென்னை,மே.14

சென்னை குன்றத்தூர் திருநாகேஸ்வரர் கோவில் பிரமோற்சவம் மே 13ம் தேதி முதல் 16 வரை நடைபெற உள்ளது. இந்தநிலையில், விழாவுக்கு குறிப்பிட்ட சமூகத்தினரிடம் மட்டுமே நன்கொடை வசூலிக்கப்படுகிறது, மற்றவர்களிடம் வசூலிக்கப்படுவது இல்லை எனக் கூறி குன்றத்தூரை சேர்ந்த இல.பாண்டியராஜன் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் பொதுநல வழக்கை தொடர்ந்தார்.

இந்த வழக்கு சென்னை ஐகோர்ட்டு நீதிபதி பரதசக்ரவர்த்தி முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி சாதியை காரணமாகக் காட்டி, கோவில் விழாவில் நன்கொடை பெற மறுப்பதும் தீண்டாமையின் இன்னொரு வடிவமே. இந்நாட்டில் தீண்டாமை பல்வேறு வழிகளில், வடிவங்களில் பின்பற்றப்படுகிறது. அந்த வகையில் இதுவும் ஒன்று. அனைத்து சமூகத்தினரையும் நன்கொடை வழங்க அனுமதிக்க வேண்டும். அனைத்து சமுதாயத்தினரும் நன்கொடை தர அனுமதி கோரும் மனுவை பரிசீலித்து தகுந்த உத்தரவு வழங்கு வேண்டும் என இந்து சமய அறநிலையத் துறைக்கு உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்தார் நீதிபதி பரத சக்கரவர்த்தி. கடவுளின் முன்பு சாதி இருக்கக்கூடாது என ஏற்கெனவே பிறப்பித்த உத்தரவை நீதிபதி சுட்டி காட்டினார்.

# பொங்கல் பண்டிகை வேட்டி, சேலை திட்டத்திற்கு நூல் கொள்முதல்; டெண்டர் கோரிய தமிழக அரசு



சென்னை, மே.14

பொங்கல் பண்டிகை வேட்டி, சேலை திட்டத்திற்கு நூல் கொள்முதல்; டெண்டர் கோரிய தமிழக அரசு

பொங்கல் பண்டிகைய ஒட்டி ரேஷன் கடைகளில் விலையில்லா வேட்டி,சேலை வழங்கப்படுகிறது.

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை ஒட்டி தமிழக அரசு சார்பில் ரேஷன் கடைகளில் ரேஷன் அட்டைதாரர்களுகு விலையில்லா வேட்டி, சேலை வழங்கப்படுவது வழக்கம்

அந்த வகையில், 2026ம் ஆண்டு பொங்கல் பண்டிகையின்போதும் ரேஷன் கடைகளில் விலையில்லா வேட்டி, சேலை வழங்கப்பட உள்ளது. இந்நிலையில், விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டட்திற்கு சுமார் 4 ஆயிரத்து 600 மெட்ரிக் டன் நூல் கொள்முதல் செய்ய தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக நூல் கொள்முதல் செய்ய தமிழக அரசின் கைத்தறி மற்றும் துணிநூல் துறை டெண்டர் கோரியுள்ளது.

டெண்டர் இறுதியானதும் ஜூலை மாத இறுதியில் வேட்டி,சேலை உற்பத்தியை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

# ஆறு இடங்களில் இன்று விமான சேவைகள் ரத்து ஏர்லைன்ஸ் நிறுவனங்கள் அறிவிப்பு



புது டெல்லி, மே.14

பஹல்காமில் அப்பாவி சுற்றுலா பயணிகள் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து கடந்த 7ந்தேதி இந்தியாபாகிஸ்தான் இடையே ராணுவ மோதல் தொடங்கியது. இதனால் இரு நாடுகளுக்கு இடையே உறவுகள் பாதிக்கப்பட்டன. வான்வழிகள் மூடப்பட்டன.

இந்திய எல்லைப்பகுதிகளின்அருகில்உள்ளவிமான நிலையங்களில் பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தக்கூடும் எனக்கருதி அந்த விமான நிலையங்கள் மூடப்பட்டன. குறிப்பாக ஜம்மு, ஸ்ரீநகர், லே, ராஜ்கோட், பதான்கோட், பஞ்சாபின் அமிர்தசரஸ் உள்பட 32விமானநிலையங்கள் மூடப்பட்டன. 15ந்தேதி வரை இவை மூடப்பட்டு இருக்கும் என அறிவிக்கப்பட்டது.

இந்த சூழலில் கடந்த 10ந்தேதி மாலை ராணுவ மோதல் முடிவுக்கு வந்தது. அதனைத்தொடர்ந்து வான்வழிகள் மீண்டும் அனுமதிக்கப்பட்டன. இதனைத்தொடர்ந்து நேற்று அந்த 32 விமான நிலையங்களையும் மீண்டும் திறக்க சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் உத்தரவு பிறப்பித்தது. தற்காலிக மூடல் உத்தரவு ரத்து செய்யப்படுவதாக அந்த உத்தரவில் கூறப்பட்டு இருந்தது. இருப்பினும், பயணிகள் விமான நிறுவனங்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு விமானப் போக்குவரத்து நிலையைச் சரி பார்க்கவும், வழக்கமான புதிய தகவல்களுக்கு விமான நிறுவனங்களின் வலைதளங்களைக் கவனிக்குமாறும் அறிவுறுத்தப் பட்டிருந்தனர்.

இந்நிலையில் ஜம்மு, அமிர்தசரஸ், சண்டிகர், லே, ஸ்ரீநகர் மற்றும் ராஜ்கோட் விமான நிலையங்களுக்கு செல்லும் மற்றும் அங்கிருந்து புறப்படும் விமானங்கள் இன்று (செவ்வாய்க்கிழமை) ரத்து செய்யப்பட்டுள்ளதாக இண்டிகோ ஏர்லைன்ஸ் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக தனது எக்ஸ் வலைதளத்தில், "சமீபத்திய முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டும், உங்கள் பாதுகாப்பை எங்கள் மிகுந்த முன்னுரிமையாகக் கொண்டும், ஜம்மு, அமிர்தசரஸ், சண்டிகர், லே, ஸ்ரீநகர் மற்றும் ராஜ்கோட்டுக்குச் செல்லும் மற்றும் புறப்படும் விமானங்கள் 2025 மே 13 ஆம் தேதி (இன்று) ரத்து செய்யப்படுகின்றன.

இது உங்கள் பயணத் திட்டங்களை எவ்வாறு சீர்குலைக்கக்கூடும் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம், மேலும் ஏற்பட்ட சிரமத்திற்கு வருந்துகிறோம். எங்கள் குழுக்கள் நிலைமையை தீவிரமாகக் கண்காணித்து வருகின்றன, மேலும் புதுப்பிப்புகளை உடனடியாக உங்களுக்குத் தெரிவிப்பார்கள். விமான நிலையத்திற்குச் செல்வதற்கு முன், எங்கள் வலைத்தளம் அல்லது நிறுவன செயலியில் உங்கள் விமான நிலையை சரிபார்க்கவும். உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், நாங்கள் ஒரு செய்தி அல்லது அழைப்பை மட்டுமே தருகிறோம். மேலும் உதவ எப்போதும் தயாராக இருக்கிறோம்" என்று அதில் பதிவிடப்பட்டுள்ளது.

இதேபோல் ஏர் இந்தியா தனது எக்ஸ் வலைதளத்தில், "சமீபத்திய முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டும், உங்கள் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும், ஜம்மு, லே, ஜோத்பூர், அமிர்தசரஸ், பூஜ், ஜாம்நகர், சண்டிகர் மற்றும் ராஜ்கோட்டுக்கான விமானங்கள் (செவ்வாய்க்கிழமை) மே 13 அன்று ரத்து செய்யப்படுகின்றன.

நாங்கள் நிலைமையைக் கண்காணித்து வருகிறோம், மேலும் உங்களுக்குத் தெரியப்படுத்துவோம்.

மேலும் தகவலுக்கு, எங்கள் தொடர்பு மையத்தை 01169329333 / 011 69329999 என்ற எண்ணில் அழைக்கவும் அல்லது எங்கள் வலைத்தளமான http://airindia.com ஐப் பார்வையிடவும்" என்று பதிவிட்டுள்ளது.

# புதிய பாம்பன் பாலத்தில் வேகம் அதிகரிப்பு: ராமேஸ்வரம் ரெயில்களின் நேரம் மாற்றி அமைப்பு

சென்னை, மே.14

பாம்பன் ராமேஸ்வரம் இடையே கடல் மேல் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பாம்பன் பாலத்தை கடந்த மாதம் (ஏப்ரல்) 6ந் தேதி பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார். இதற்கு முன்பு, புதிய பாலத்திற்கு அருகே உள்ள பழைய பாலத்தில் மணிக்கு 10 கி.மீ. வேகத்திலேயே ரெயில்கள் செல்ல முடியும். ஆனால், புதிய பாலத்தில் 75 கி.மீ. வேகத்தில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால், ராமேஸ்வரம் வந்து செல்லும் ரெயில்களின் நேரத்தை தெற்கு ரெயில்வே மாற்றியமைத்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ராமேஸ்வரத்தில் இருந்து திருச்சி செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண் 16850) வரும் 14ந் தேதி முதல் மதியம் 2.50 மணிக்கு புறப்படுவதற்கு பதிலாக 3 மணிக்கு புறப்படும். இதேபோல், ராமேஸ்வரத்தில் இருந்து திருப்பதி செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (16780) வரும் 15ந் தேதி முதல் மாலை 4.20 மணிக்கு புறப்படுவதற்கு பதிலாக மாலை 4.30 மணிக்கு புறப்படும். மேலும், ராமேஸ்வரத்தில் இருந்து சென்னை செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (16752) வரும் 14ந் தேதி முதல் மாலை 5.30 மணிக்கு புறப்படுவதற்கு பதிலாக மாலை 5.50 மணிக்கு புறப்படும்.

ராமேஸ்வரத்தில் இருந்து கோவை செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (16617) வரும் 14ந் தேதி முதல் இரவு 7.30 மணிக்கு பதில் இரவு 7.55 மணிக்கு புறப்படும். ராமேஸ்வரத்தில் இருந்து சென்னை வரும் எக்ஸ்பிரஸ் ரெயில் (22662) வரும் 14ந் தேதி முதல் இரவு 8.35 மணிக்கு புறப்படுவதற்கு பதிலாக 8.50 மணிக்கு புறப்படும். ராமேஸ்வரத்தில் இருந்து கன்னியாகுமரி செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (22621) ஜூன் 7ந் தேதி முதல் மண்டபம் ரெயில் நிலையத்தில் தற்காலிகமாக நின்று செல்லும். மேலும், இந்த ரெயில் ராமேஸ்வரத்தில் இரவு 9.10 மணிக்கு புறப்படுவதற்கு பதிலாக இரவு 9.15 மணிக்கு புறப்படும்.

ராமேஸ்வரத்தில் இருந்து மதுரை செல்லும் பயணிகள் ரெயில்14ந்தேதிமுதல்மாலை6மணிக்குபுறப்படுவதற்கு பதிலாக மாலை 6.15 மணிக்கு புறப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
14.5.2025

## சித்திரை முழுநிலவு மாநாடு: தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்த அன்புமணி ராமதாஸ்



சென்னை,மே.14

வன்னியர்சங்கம் சார்பில் மாமல்லபுரம் அடுத்த திருவிடந்தை பகுதியில், சித்திரை முழு நிலவு வன்னியர் இளைஞர் பெருவிழா மாநாடு நேற்று நடைபெற்றது. 12 ஆண்டுகளுக்கு பின்னர் நடைபெற்ற இந்த மாநாட்டில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். பா.ம.க. நிறுவனர் ராமதாஸ், பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ், சவுமியா அன்புமணி உள்ளிட்டோரும் பங்கேற்றுள்ளனர். இந்த மாநாட்டில் 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், சித்திரை முழுநிலவு மாநாடு சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கியதற்காக தமிழக அரசுக்கு பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் நன்று தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

மாமல்லபுரம் சித்திரை முழுநிலவு மாநாட்டை சிறப்பாகவும், ஒழுங்குடனும் நடத்துவதற்கு ஒத்துழைத்த, உறுதுணையாக இருந்த வடக்கு மண்டல காவல்துறை தலைவர், அதற்குட்பட்ட சரகங்களின் துணைத் தலைவர்கள், செங்கல்பட்டு மாவட்ட கண்காணிப்பாளர், துணைக் கண்காணிப்பாளர், ஆய்வாளர்கள், சார் ஆய்வாளர்கள், காவலர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த காவல்துறைக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாநாட்டுக்கு ஒத்துழைப்பு நல்கிய தமிழக அரசுக்கும் நன்றிகள்! #சித்திரைமுழுநிலவுமாநாடு' என தெரிவித்துள்ளார்

## சேலம் சுற்றுலா வேன் கவிழ்ந்து விபத்து: 20க்கும் மேற்பட்டோர் காயம்

சேலம், மே.14

சேலம் மாவட்டம் செல்லியம்பாளையம் பகுதியில் ஒரு சுற்றுலா வேன் சென்று கொண்டிருந்தது. அந்த வேன் திடீரென ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடி சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பாண்டிச்சேரியைச் சேர்ந்த 20 சுற்றுலா பயணிகள் படுகாயம் அடைந்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று படுகாயமடைந்த பயணிகளை மீட்டு மருத்துவமனைக்குசிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து வழக்குபதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். சுற்றுலா வேன் கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.



## 12 வயதில் வீட்டை விட்டு வெளியேறி 40 ஆண்டுகளுக்கு பிறகு தாயை சந்தித்த மகன்... தேனியில் நெகிழ்ச்சி

தேனி, மே.14

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே உள்ள கதிர்நரசிங்கபுரத்தை சேர்ந்தவர் நடராஜன். அவருடைய மனைவி ருக்குமணி. இந்த தம்பதிக்கு குமார், செந்தில், முருகன் என்ற 3 மகன்கள் உள்ளனர். இவர்கள் சொந்த ஊரில் இருந்து பிழைப்பு தேடி, கடந்த 1985ம் ஆண்டு குடும்பத்தோடு சென்னைக்கு குடி பெயர்ந்தனர்.

அப்போது, மூத்த மகனான குமாரை வேலைக்கு செல்லும்படி அவரது பெற்றோர் வலியுறுத்தினர். இதனால் பெற்றோரிடம் கோபித்துக் கொண்டு குமார் வீட்டை விட்டு வெளியேறினார். இதையடுத்து குமாரை, பல இடங்களில் அவரது பெற்றோர் தேடி அலைந்தனர். ஆனால் எங்கு தேடியும் குமாரை கண்டுபிடிக்க முடியவில்லை.

இதற்கிடையே நடராஜன் இறந்து விட்டார். இதனால் ருக்குமணி தனது 2வது மகன் செந்திலுடன் சொந்த ஊரான கதிர்நரசிங்கபுரத்தில் வந்து குடியேறினார். இளைய மகன் முருகன் சென்னையிலேயே வேலை செய்து வருகிறார். இதற்கிடையே 12 வயதில் காணாமல் போன குமார், மீண்டும் ஊருக்கு திரும்பி செல்ல கூடாது என்ற வைராக்கியத்துடன் இருந்தார்.



இவர் பல்வேறு ஊர்களில் கிடைக்கும் கூலி வேலைகளை செய்து வந்தார். மேலும் மும்பை, ஆந்திரா, காஷ்மீரில் மட்டுமின்றி மலேசியாவுக்கும் சென்று வேலை செய்தார். அதன்பின்னர் தமிழ்நாட்டுக்கு வந்த குமார், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மச்சுவாடி பகுதியில் ஆறுமுகம் என்பவருக்கு சொந்தமான ஓட்டலில் வேலைக்கு சேர்ந்தார்.

அங்கு பல ஆண்டுகளாக விசுவாசமாக வேலை செய்து வந்த குமாரை, ஓட்டல் உரிமையாளர் ஆறுமுகத்துக்கு மிகவும் பிடித்தது. இதனால் தனது பேத்தியை அவருக்கு திருமணம் செய்து கொடுத்தார். திருமணமாகி மனைவியுடன் மச்சுவாடி கிராமத்தில் வசித்து வந்த குமாருக்கு 3 மகள்கள் உள்ளனர். பின்னர் அந்த ஓட்டலை குமார் நடத்தி வந்தார். ஆண்டுகள் பல உருண்டோடி விட்ட நிலையில் மூத்த மகளுக்கும் திருமணம் செய்து வைத்துள்ளார்.

இந்தநிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு, தேனி மாவட்டத்தில் உள்ள மாவூற்று வேலப்பர் கோவிலுக்கு குமார் தனது குடும்பத்தினருடன் செல்ல முடிவு செய்தார். அதன்படி கடந்த சில தினங்களுக்கு முன்பு, வேலப்பர் கோவிலுக்கு பஸ்சில் சென்றபோது கதிர்நரசிங்கபுரம் ஊரை பார்த்தார். அப்போது அவருக்கு கடந்த கால நிகழ்வுகள் தன் கண் முன்னே வந்து சென்றது. தனது பெற்றோர் மீது இருந்த கோபம் தணிந்து குமாரின் உள்ளம் கனிந்தது.

தனது குடும்பத்துடன் அவர் கதிர்நரசிங்கபுரத்தில் இறங்கினார். பின்னர்தனது குடும்ப விவரங்களை கிராம மக்களிடம் கூறினார். உடனடியாக கிராம மக்கள், அவருடைய குடும்பத்தினர் மற்றும் தாயார் ருக்குமணி வசிக்கும் வீடு குறித்தும் தகவல் தெரிவித்துள்ளனர். அதைத்தொடர்ந்து குமார் தனது தாய் வசிக்கும் வீட்டுக்கு சென்றார்.

வீட்டில் வயதான நிலையில் இருந்த தனது தாய் ருக்குமணியை பார்த்தார். அப்போது, 40 ஆண்டுகளுக்கு முன்பு வீட்டைவிட்டு ஓடிச் சென்ற உனது மூத்த மகன் குமார் வந்துள்ளேன் என்று தன்னை தாயாரிடம் தெரிவித்தார். தனது மனைவி, மகள்களையும் அறிமுகம் செய்து வைத்தார். ஒருகணம் ஆச்சரியத்தில் உறைந்த ருக்குமணி, மீண்டும் சந்தித்த மகிழ்ச்சியில் ஆனந்தகண்ணீர்சிந்தியபடி மகனை கட்டி தழுவினார்.

மேலும் 90 வயதை கடந்த குமாரின் பாட்டியும், குமார் திரும்பி வந்ததை அறிந்து மகிழ்ச்சியில் பேரனை கட்டியணைத்தார். மேலும் உடன் பிறந்த சகோதரர்கள் மற்றும் அவரது குடும்பத்தினரையும் சந்தித்த குமார் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். இந்த நிகழ்வு அப்பகுதி கிராம மக்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## தனியாக வசிக்கும் முதியவர்களின் பாதுகாப்பை உறுதி செய்திட வேண்டும்: டி.டி.வி. தினகரன் வலியுறுத்தல்

சென்னை, மே.14

கொலைக் குற்றவாளிகளை கண்டறிவதில் அலட்சியமாக செயல்படும் தி.மு.க. அரசின் செயல்பாடு கடும் கண்டனத்திற்குரியது என்று அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:



சேலம் மாவட்டம் ஜாகிர் அம்மாபாளையம் பகுதியில் வீட்டில் தனியாக வசித்து வந்த வயதான தம்பதியினர் அடையாளம் தெரியாத நபர்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருப்பதாக ஊடகங்களில் வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த அதிர்ச்சியளிக்கின்றன.

திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட தமிழகத்தின் மேற்கு மண்டலத்தில் அண்மைக் காலமாகவே தனியாக வசித்து வரும் முதியவர்களை நோட்டமிட்டு கொலை செய்து கொள்ளையில் ஈடுபட்டு வரும் குற்றவாளிகளை கண்டுபிடிக்கமுடியாத தி.மு.க. அரசால் தற்போது மேலும் ஒரு இரட்டைக் கொலை அரங்கேறியுள்ளது.

ஒவ்வொரு கொலைச்சம்பவத்தின் போதும் பல்வேறு தனிப்படைகளை அமைத்தும், தீவிர தேடுதல் வேட்டை நடத்தியும் இதுவரை கொலைக் குற்றவாளிகளை நெருங்க முடியாமல் திணறி வரும் காவல் துறையின் மீதான மக்களின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது.

எனவே, சேலத்தில் வயதான தம்பதியினர் கொலை வழக்கை விரிவாக விசாரித்து கொலைக் குற்றவாளிகளை கண்டறிந்து கடுமையான தண்டனை விதிப்பதோடு, தனியாக வசிக்கும் முதியவர்களின் பாதுகாப்பை உறுதி செய்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என காவல்துறையையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## திருநெல்வேலி: தம்பியை கத்தியால் குத்திய அண்ணன் கைது

திருநெல்வேலி மே.14

நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரம், பெரியகுளம்வடக்குதெருவை சேர்ந்த பழனிசங்கர் (வயது 33) என்பவரும் சுப்பிரமணியன் (37) என்பவரும் உடன் பிறந்த சகோதரர்கள் ஆவார்கள். இந்நிலையில் பழனிசங்கர் காதல் திருமணம் செய்ததிலிருந்து, பழனிசங்கருக்கும் சுப்பிரமணியனுக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு பிரச்சினை இருந்து வந்துள்ளது. இந்த நிலையில் நேற்று முன்தினம் (11.5.2025) பழனிசங்கரும் அவரது மனைவியும் தனது வீட்டின் முன்பு நின்று பேசிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த சுப்பிரமணியன் பழனிசங்கரிடம் தகராறில் ஈடுபட்டு அவதூறாக பேசி கத்தியால் கையில் தாக்கி ரத்தக்காயம் ஏற்படுத்தி மிரட்டல் விடுத்து சென்றுள்ளார். இதுகுறித்து பழனிசங்கர் அம்பாசமுத்திரம் காவல்நிலையத்தில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் சப் இன்ஸ்பெக்டர் மேதாஜி சிதம்பரம் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு சுப்பிரமணியனை நேற்று (12.5.2025) கைதுசெய்து நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தார்.

## உதயநிதி அழைத்தால் வரும் தேர்தலில் பிரச்சாரம் செய்வேன் சந்தானம்





சந்தானம் நடித்துள்ள 'டிடி நெக்ஸ்ட் லெவல்' படத்தின் பத்திரிக்கையாளர்கள் சந்திப்பு சென்னை பிரசாத் லேபிள் நடைபெற்றது. இதில் ஆர்யா, சந்தனம் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் நடிகர் ஆர்யா பேசுகையில், 'டிடி நெக்ஸ்ட் லெவல்' படம் எனக்கு ரொம்ப பிடிக்கும் நல்ல ஆர்வமாக இருக்கும். அதே போல இந்த படத்தின் கதையும் எனக்கு பிடித்திருந்தது. அதுனால் தான் தயாரித்தேன். சந்தானம் படத்தில் எவ்வளவு பெஸ்ட் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு கொடுத்து உள்ளார். இந்த படம் வெற்றிகரமாக சென்றால் அடுத்த படத்தையும் தயாரிப்பேன் என்று தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து சந்தானம் பேசுகையில், 'ஏன் மச்சான் காமெடியனாக நடிக்கும் பொழுது நீ நீயாக இருப்ப. ஹீரோவாக ஆன பின்ன மாறி விட்ட என்று கேட்டான் ஆர்யா. இந்த 'டிடி நெக்ஸ்ட் லெவல்' பழைய சந்தானத்தை வெளியே கொண்டு வர வைக்கும். இயக்குனர் பிரேம் தமிழ்நாட்டின் கிறிஸ்டோபர் நோலன்' என்று கிண்டலாக சந்தானம் கூறினார்.

அதன்பின்னர் சந்தானத்திடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில் பின்வருமாறு

'கோவிந்தா கோவிந்தா பாடலை கிண்டல் செய்ய வில்லை. நான் பெருமாள் உடைய பக்தர் எனக்கு முதல் பாடல் கடவுள் பாடல் வைக்க வேண்டும் என்ற ஆசையில் தான் வைத்தேன்.எனக்கு கடவுள் நம்பிக்கை இருக்கு. பெருமாள் எனக்கு பிடிக்கும். ஒவ்வொரு படம் வெளியாகும் பொழுதும் திருப்பதிக்கு கீழ் இருந்து மேல்திருப்பதிக்கு நடந்து செல்வேன்.

ஏற்கனவே நிறைய ஹீரோ படங்கள் வெயிட்டிங் உள்ளது. நிறைய படங்களில் என்னை காமெடி வேடங்களில் பார்த்து விட்டனர். இனியும் காமெடி வேடங்களில் நடிக்க வேண்டும் என்றால் புதுசா ஒரு ஸ்டைலில் நடிக்க வேண்டும் என நினைக்கிறேன். நண்பன் சிம்புக்காக மீண்டும் அவர் படத்தில் காமெடியனாக நடிக்கிறேன். அதே போல் நண்பர் உதயநிதி அழைத்தால் எனக்கு சில விஷயங்கள் செட்டானால் அவருக்காக வரும் தேர்தலில் பிரச்சாரம் செய்வேன்' என்று சந்தானம் தெரிவித்தார்.

## அரசுக்கு எதிராகப் பேச நடிகர்கள் பயப்படுகிறார்கள் கவிஞர் ஜாவேத் அக்தர்



இந்தி சினிமா பாடலாசிரியர் மற்றும் உருது கவிஞராக விளங்குபவர் ஜாவேத் அக்தர். மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த இவர் வெளிப்படையாகப் பேசியிருக்கும் கருத்துகள் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளன. திரைக்கதை கதாசிரியர், எழுத்தாளர், பாடலாசிரியர், கவிஞர் என பன்முகத் தன்மை கொண்டவரான ஜாவேத் அக்தர், மூத்த அரசியல் தலைவரும் உச்ச நீதிமன்ற வழக்குரைஞருமான கபில் சிபலுடனான நேர்காணலில் பேசியிருப்பதைப் பார்க்கலாம்:

"திரைத்துறையைச் சேர்ந்தோர் உள்பட பல பிரபலங்கள் அமைதி காத்து வருவதைக் காண முடிகிறது. இதற்கு முக்கிய காரணம், அவர்கள் அனைவரும் சோதனை முகமைகளின் ரெய்டு நடவடிக்கைகளுக்கு பயப்படுகிறார்கள். வருமான வரித் துறை, அமலாக்கத்துறை, சிபிஐ போன்ற அமைப்புகளின் விசாரணை நடவடிக்கைகள் தங்கள் மீதும் திரும்புமோ என்ற அச்சம் அவர்கள் மனதில் குடிகொண்டுள்ளது. இது உண்மையா என்று ஆனித்தரமாகச் சொல்ல முடியாவிட்டாலும், இந்த மனநிலை அவர்களிடம் இருக்கிறதென்றே தோன்றுகிறது.திரைத்துறையானது தொழிலதிபர்களின்கீழ்இயங்குகிறது.அப்படியிருக்கும்போது,ஹாலிவுட்டுடன்இந்தியதிரைத்துறையைஒப்பிடும்போது, மேரில் ஸ்ட்ரீப் அமெரிக்க அரசுக்கு எதிராகப் பேசியுள்ளார். ஆனால், அவர் மீது வருமான வரித் துறை நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்பதே உண்மை.இந்த அச்சம் ஒருவரது மனதில் நிலைத்திருந்தால், தங்கள் மீது சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விசாரணையும் நடத்தப்படலாம் என்கிற எண்ணம் தோன்றும், இதுகுறித்த கவலையும் சூழும். .திரைத்துறை மட்டுமன்றி நாடெங்கிலும் இந்த அச்ச உணர்வு நிலைபெற்றுள்ளது.பாலிவுட் நட்சத்திரங்கள் என்னதான் பிரபலமடைந்திருந்தாலும், அவர்களும் பிறரைப் போலவே இந்த சமூகத்தில்தான் வசித்து வருகிறார்கள். ஆகவே அவர்களும் அபாயத்தை எதிர்கொள்ள நேரிடும்" என்றார். அரசுக்கு எதிரான விமர்சனங்களை துணிச்சலாக முன்வைக்க தயங்காத ஜாவேத் அக்தர், கடந்த 1999ஆம் ஆண்டு 'பத்ம ஸ்ரீ', அதனைத்தொடர்ந்து 2007ஆம் ஆண்டு 'பத்ம பூஷன்' ஆகிய நாட்டின் இருபெரும் உயரிய விருதுகளைப் பெற்றுள்ளார். பாலிவுட் பாடலாசிரியர் ஜாவேத் அக்தர் நடிகை கங்கனா ரணாவத் மீது அவதூறு வழக்கு தொடர்ந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## டிடி நெக்ஸ்ட் லெவல் கிங்ஸ்லியின் கதாபாத்திர அறிமுக போஸ்டர் வெளியீடு

கோலிவுட்டில் நகைச்சுவை நடிகராக அறிமுகமாகி, இன்று முன்னணி நடிகர்களில் ஒருவராக வளர்ந்திருப்பவர் சந்தானம். 2016ல் சந்தானம் நடிப்பில் வெளிவந்த 'தில்லுக்குதுட்டு', 2023ல் வெளிவந்த 'டிடி ரிட்டர்ன்ஸ்' ஆகிய படங்கள் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றன. அதனை தொடர்ந்து இதன் மூன்றாம் பாகமாக 'டிடி நெக்ஸ்ட் லெவல்' உருவாகி உள்ளது. ஆர்யாவின் தயாரிப்பில் உருவாகும் இந்த படத்தை பிரேம் ஆனந்த் இயக்கியுள்ளார். இதில் சந்தானத்துடன் இணைந்து கஸ்தூரி, செல்வராகவன், கவுதம் வாசுதேவ் மேனன், மொட்டை ராஜேந்திரன் மற்றும் பலர் நடித்துள்ளனர். வருகின்ற 16ம் தேதி திரைக்கு வர உள்ள இந்த படத்திற்காக ரசிகர்கள் மிகுந்த ஆர்வத்துடன் காத்துக்கொண்டிருக்கின்றனர். இந்தநிலையில் இப்படத்திற்கு தணிக்கை வாரியம் 'யு/ஏ' சான்றிதழ் வழங்கியுள்ளது.

படத்தில் நடித்த நடிகர்களின் கதாப்பாத்திர அறிமுக போஸ்டர்களை படக்குழு வெளியிட்டு வருகிறது. இப்படத்தில் கஸ்தூரி சந்தானத்தின் அம்மாவாக தேவகி & ஷில்பா என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளார் இந்நிலையில் 'லொள்ளு சபா' மாறன் 'ஆல் லாங்குவேஜ் ஆறுமுகம்' மற்றும் ரெடின் கிங்ஸ்லி 'கோபால்' கதாப்பாத்திர அறிமுக போஸ்டர்களை படக்குழு வெளியிட்டுள்ளது.

## இத்தாலி ஓபன் டென்னிஸ்: டாமி பால் 4வது சுற்றுக்கு தகுதி



விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ள இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடர் ரோம் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் இன்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3வது சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்க வீரரான டாமி பால், செக் நாட்டின் டோமாஸ் மச்சாக் உடன் மோதினார்.

இதில் முதல் செட்டை டாமி பால் கைப்பற்றிய நிலையில் 2வது செட்டை மச்சாக் கைப்பற்றினார். இதனையடுத்து நடைபெற்ற 3வது செட்டை டாமி பால் கைப்பற்றி வெற்றி பெற்றார். டாமி பால் இந்த ஆட்டத்தில் 63, 67 மற்றும் 64 என்ற செட் கணக்கில் கைப்பற்றி 4வது சுற்றுக்கு முன்னேறினார்.

இவர் 4வது சுற்றில் அலெக்ஸ் டி மினார் உடன் மோத உள்ளார்.

## டெஸ்டில் இருந்து ஓய்வு: ரோகித், விராட் கோலியை இனி எப்போது சர்வதேச கிரிக்கெட்டில் காணலாம்..?




இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர்களான ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளனர். இதில் ரோகித் சர்மா கடந்த 7ம் தேதி தனது ஓய்வு முடிவை அறிவித்த நிலையில் விராட் கோலி இன்று அறிவித்துள்ளார். இது ரசிகர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இருவரும் ஏற்கனவே சர்வதேச டி20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுவிட்ட நிலையில் தற்போது டெஸ்ட் போட்டிகளிலும் இருந்தும் விடைபெற்று விட்டனர். ஆனால் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து விளையாட முடிவு செய்துள்ளனர். இதனால் இனி ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி இருவரையும் சர்வதேச கிரிக்கெட்டில் ஒருநாள் போட்டிகளில் மட்டுமே கான முடியும்.

இந்த சூழலில் இருவரும் இந்திய அணியில் அடுத்து எப்போது ஒருநாள் போட்டிகளில் விளையாடப் போகிறார்கள் என்பதை இங்கு காணலாம்..!

இந்திய கிரிக்கெட் அணி வரும் ஆகஸ்ட் மாதம் வங்காளதேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாட உள்ளது. இந்த தொடரில் விராட் கோலி மற்றும் ரோகித் சர்மா களமிறங்க வாய்ப்பு உள்ளது. இதனால் ரோகித் மற்றும் விராட் கோலியை சர்வதேச கிரிக்கெட் களத்தில் காண ஏறக்குறைய 3 மாதங்களுக்கு மேல் ஆகலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாக்.வீரர் தேர்வு செய்த சிறந்த டி20 பிளேயிங் லெவன்... இந்திய வீரர்கள் இடம்பெற்றுள்ளார்களா..?






நூற்றாண்டை தாண்டி நடைபெற்று வரும் கிரிக்கெட் போட்டியில் சிறந்து விளங்கிய வீரர்களை கொண்டு கனவு அணியை முன்னாள் மற்றும் இந்நாள் வீரர்கள் தேர்வு செய்வது வழக்கம். அந்த வகையில் பாகிஸ்தான் அணியின் இளம் கிரிக்கெட் வீரரான சைம் அயூப் தற்சமயத்தில் டி20 கிரிக்கெட்டில் அசத்தி வரும் வீரர்களை கொண்டு பிளேயிங் லெவனை உருவாக்கியுள்ளார்.

அந்த அணியில் பாகிஸ்தான் அணியின் முன்னணி வீரர்களான பாபர் அசாம், முகமது ரிஸ்வான் மற்றும் ஷாகீன் அப்ரிடி ஆகியோரை கழற்றிவிட்டுள்ளார்.

அத்துடன் இந்திய வீரர்களான ஹர்திக் பாண்ட்யா மற்றும் ஜஸ்பிரித் பும்ரா ஆகியோரை தேர்வு செய்து ஆச்சரியமளித்துள்ளார்.

சைம் அயூப் தேர்வு செய்த டி20 பிளேயிங் லெவன் பின்வருமாறு:

1. பகர் ஜமான் (பாகிஸ்தான்)

2. டிராவிஸ் ஹெட் (ஆஸ்திரேலியா) 3. பட்லர் (இங்கிலாந்து) 4. நிக்கோலஸ் பூரன் (வெஸ்ட் இண்டீஸ்) 5. கிளாசென் (தென் ஆப்பிரிக்கா) 6. ஹர்திக் பாண்ட்யா (இந்தியா) 7. பென் ஸ்டோக்ஸ் (இங்கிலாந்து) 8. ரஷீத் கான் (ஆப்கானிஸ்தான்) 9. சாண்ட்னர் (நியூசிலாந்து) 10. ஸ்டார்க் (ஆஸ்திரேலியா) 11. ஜஸ்பிரித் பும்ரா (இந்தியா)

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.